


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு சுற்றுலாத்துறைக்காக தயாரிக்கப்பட்ட "Timeless TamilNadu" என்ற ஆவணப் படத்திற்கு 71–வது தேசிய திரைப்பட விருது பட்டியலில் சிறந்த கலை/பண்பாடுக்கான படத்திற்கான 'ராஜத்கமல்' விருது அறிவிக்கப்பட்டதற்காக செலிபிரிட்டி மேலாண்மை நிறுவனத்தைச் சேர்ந்த முதன்மை செயல் அலுவலர் பிரசாந்த் சோட்டாணி, நிறுவனர் மற்றும் இயக்குநர் திருமதி.நிஷா சோட்டாணி, இயக்குநர் காமக்யா நாராயன் சிங் ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்த நிகழ்வின்போது, சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். பி. சந்திரமோகன், சுற்றுலாத்துறை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் பொது மேலாளர் திருமதி ச.கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.08.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நெடுஞ்சாலைத் துறையில் உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 45 நபர்களுக்கும், பொதுப்பணித்துறை சார்பில், உதவிப் பொறியாளர் (சிவில்) மற்றும் (மின்) ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 165 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செயலாளர் மரு. ஆர்.செல்வராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.08.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நெடுஞ்சாலைத் துறையில் உதவிப் பொறியாளர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 45 நபர்களுக்கும், பொதுப்பணித்துறையில் உதவிப் பொறியாளர் (சிவில்) மற்றும் (மின்) ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 165 நபர்களுக்கும், வேளாண்மை – உழவர் நலத் துறையில் வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 169 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், ஆய்வக உதவியாளர், தட்டச்சர், காவலர் ஆகிய பணியிடங்களுக்கு 33 வாரிசுதாரர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.8.2025) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 169 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், ஆய்வக உதவியாளர், தட்டச்சர், காவலர் ஆகிய பணியிடங்களுக்கு 33 வாரிசுதாரர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பாளையம் ஊராட்சி, கருக்கன்காட்டு வலசு பகுதியில் ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணியை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தொடங்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் செங்கோட்டையன், இளங்கோ உள்ளிட்ட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.8.2025) முகாம் அலுவலகத்தில், உலகப் புகைப்பட தினத்தையொட்டி, தமிழ்நாடு பத்திரிகை புகைப்படக் கலைஞர்கள் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் தலைவர் எம்.வேதன், துணைத் தலைவர் ஜோதி இராமலிங்கம், ஆலோசகர்கள் முருகராஜ், திருமதி ஷீபா பிரசாத், நிருவாகிகள் சீனிவாசன், ரமேஷ், கோவிந்தராஜ், இரவீந்திரன், சுரேஷ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்று, உறுப்பு தானம் செய்வதற்கு ஒப்புதல் வழங்கியுள்ள புகைப்படக் கலைஞர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி, சிறப்பு செய்தார். இந்நிகழ்வின்போது, இந்து குழுமத்தின் இயக்குநர் என்.ராம் உடனிருந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.8.2025) முகாம் அலுவலகத்தில், உலகப் புகைப்பட தினத்தையொட்டி தன்னை சந்தித்து வாழ்த்துப் பெற்ற தமிழ்நாடு பத்திரிகை புகைப்படக் கலைஞர்களை முதலமைச்சர் அவர்கள் புகைப்படம் எடுத்தார்.

## வரலாற்று ஆவணங்களாய் நிகழ்வுகளை உறையச் செய்யும்

# புகைப்படக் கலைஞர்களுக்கு வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, ஆக.21-

உலகப் புகைப்படத் தினத்தையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நொடியில் கரைந்து செல்லும் நிகழ்வுகளை ஞாபகங்களென வரலாற்று ஆவணங்களென அழகியலுடனும் கலைநயத்துடனும் காலத்தால் அழியாத வகையில் உறையச் செய்திடும் புகைப்படக் கலைஞர்களுக்கு வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாட்டிற்கான ஊரக உட்கட்டமைப்பு மற்றும் குளச்சல் துறைமுக மேம்பாட்டிற்கான நபார்டு (NABARD) வங்கியின் நிதியுதவியினை விரைவில் விடுவிக்கக்கோரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கடிதத்தை நேற்று முன்தினம் (19.08.2025) புதுதில்லியில் ஒன்றிய அரசின் நிதித் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களிடம் தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் நேரில் சந்தித்து வழங்கினார்கள்.



திருப்பூர் மாநகராட்சி, 49வது வார்டு, ஆர்.வி.நகர் பகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வீடு தேடி சென்று வழங்கும் வாகனத்தினை துவக்கி வைத்து மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வீடு தேடிச் சென்று மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டச் செயலாளர் ந.தினேஷ்குமார் வழங்கினர். இதில் வட்டக் கழக செயலாளர் மு.மனோகரன், பொறுப்பாளர் ஜேம்ஸ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.